# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● ஜூலை 31, 2021

Weekly E-paper ● July 31, 2021




### சமூகநீதிப் பாதுகாப்புக் கூட்டியக்கம் சார்பில்

## ஆகஸ்ட் 9 ஆர்ப்பாட்டம்

## ‘நீட்’ தேர்வை ரத்து செய்!

## பழைய தவறு கற்றுக்கொடுக்கும் பாடம்

நேர்காணல்: தோழர் கொளத்தூர் மணி

## சாதி ஒழிப்புக் களத்தில் திமுக

தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) திருவள்ளுவர் ஆண்டு 2052 ஜூலை 31, 2021 Weekly E-paper July 31, 2021


## சமூகநீதிப் பாதுகாப்புக் கூட்டியக்கம் சார்பில்

# ஆகஸ்ட் 9 ஆர்ப்பாட்டம்

# ‘நீட்’ தேர்வை ரத்து செய்!


**சமூகநீதிப் பாதுகாப்புக் கூட்டியக்கம்**

122/130, என்.டி.ஆர். தெரு, ரெங்கராஜபுரம்,

கோடம்பாக்கம், சென்னை-24.

தொலைபேசி – 9443933669, 9344795505

மின்னஞ்சல்- socialjustice100.org@gmail.com


27 - 07 – 2021

### ஒன்றிய அரசே!

### நீட் தேர்வை ரத்து செய்!

சமூகநீதிப் பாதுகாப்புக் கூட்டியக்கம் சார்பில் சென்னை – கோவை -திருச்சி – மதுரை - நெல்லை மற்றும் புதுவையில் ஆகஸ்ட்-9இல் ஆர்ப்பாட்டம்.

சமூகநீதிப் பாதுகாப்புக் கூட்டியக்கத்தின் செயற்குழுக்கூட்டம் **25-07–2021** ஞாயிறு காலை சென்னையில் நடைபெற்றது. பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்** தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில், கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தமிழ்நாட்டில், தமிழ்மக்களின் வரிப்பணத்தில் அமைக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில், தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக்கல்வி உரிமையைப் பறிக்கும் வகையில் ஒன்றிய அரசால் திணிக்கப்பட்டுள்ள நீட்தேர்வு ஒட்டுமொத்தமாகச் சமூகநீதிக்கே எதிரானது எனக்கருதி நீட்தேர்வை ரத்து செய்யப் போராடுவது என்று இக்கூட்டம் முடிவு செய்கிறது. மேலும் ஒன்றியம் முழுவதும் கொரோனா பெரும் தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் IAS, IPS, UPSC, CBSC, கேந்திரிய பள்ளித் தேர்வுகள் உள்ளிட்ட அனைத்து பொதுத் தேர்வுகளையும் ரத்து செய்துள்ள ஒன்றிய அரசு நீட் தேர்வையும் ரத்து செய்திட வேண்டும் என வலியுறுத்தி ஆகஸ்ட்9-ஆம்நாள் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, நெல்லை மற்றும் புதுவை ஆகிய 6 இடங்களில் சமூகநீதிப் பாதுகாப்புக் கூட்டியக்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. தமிழ்நாட்டு மருத்துவக் கல்லூரிகளில் இருந்து ஒன்றிய அரசு பெறுகிற உயர் மருத்துவக்கல்வி இடங்களில் 69% இடஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படாததால் ஓபிசி மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். எனவே, ஒன்றிய அரசு 69% இடஒதுக்கீட்டை முறையாகக் கடைபிடிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து 69% ஆதரவான தீர்ப்பை பெற்றுள்ளது. இது உயர்மருத்துவக் கல்வியில் ஒன்றிய அரசால் மறுக்கப்பட்ட நீதியை ஓபிசி மாணவர்களுக்கு பெற்றுத்தரும் சமூகநீதி நடவடிக்கை என்பதால், தமிழ்நாடு அரசைக் இக்கூட்டம் பாராட்டுகிறது.

3. ஓபிசி மாணவர்களுக்கான 27% இடஒதுக்கீடு உரிமையைக் கடந்த முப்பதாண்டுகளாக ஒன்றிய அரசுகள் சரிவர நடைமுறைப்படுத்தாத நிலையில் கிரீமிலேயர் என்ற தடுப்பின் மூலம் ஓபிசி மாணவர்களுக்கு ஒன்றிய அரசு பெரும் துரோகம் செய்து வருகிறது. இந்தத் துரோகச் செயலை முறியடித்து 27% இடஒதுக்கீட்டை முழுமையாகப் பெறும் வகையில் தமிழ்நாட்டு மாணவர்களின் ஓபிசி

1


**சமூகநீதிப் பாதுகாப்புக் கூட்டியக்கம்**

122/130, என்.டி.ஆர். தெரு, ரெங்கராஜபுரம்,

கோடம்பாக்கம், சென்னை-24.

தொலைபேசி – 9443933669, 9344795505

மின்னஞ்சல்- socialjustice100.org@gmail.com


சான்றிதழ்களில் பெற்றோரின் விவசாயம் மற்றும் சம்பள வருமானத்தைக் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை எனத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டிருப்பதை இக்கூட்டம் பெரும் மகிழ்வோடு வரவேற்றுப் பாராட்டுகின்றது.

4. ஜாதியின் பேரால் மறுக்கப்பட்டிருந்த கல்வி- வேலைவாய்ப்பு உரிமைகளைப் பெறவும், சமத்துவம் - சமூகநீதியை நிலைநாட்டவும் தமிழ்நாட்டில் எழுந்த வகுப்புரிமை முழக்கமே இன்று இந்திய ஒன்றியம் முழுவதும் உள்ள இடஒதுக்கீடு உரிமைக்கு முன்னோடியாக இருக்கிறது.

இடஒதுக்கீட்டிற்கு ஆபத்து வந்தபோதெல்லாம் தமிழ்நாட்டில் எழுந்த மாபெரும் போராட்டங்களே இன்றளவும் இந்திய ஒன்றியத்தில் சமூகநீதியைப் பாதுகாத்து வருகின்றன. எனவே, சமூகநீதிக்கான வகுப்புரிமைப் போராட்ட வரலாறுகளை இளைய தலைமுறையினரும் புரிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு அரசு பாடநூல் புத்தகங்களில் இடஒதுக்கீடு வரலாற்றைப் பாடமாக வைக்க வேண்டுமெனத் தமிழக அரசை இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**இக்கூட்டத்தில் பங்கேற்ற அமைப்புகள், பொறுப்பாளர்கள்**

| | |
|---|---|
| திராவிட இயக்கத் தமிழர் பேரவை | மா.உமாபதி, எட்வின் |
| ஆதித்தமிழர் பேரவை | விஜயன், சிவா, |
| திராவிடத் தமிழர் கட்சி | வழக்குரைஞர் வெண்மணி, மார்ட்டின், |
| புதியகுரல் | ஓவியா, சாந்தகுமார், |
| திராவிடன் அறக்கட்டளை | கோவை பாபு, |
| தமிழ்நாடு திராவிடர் கழகம் | காசு. நாகராசன், சண்முகவேல் பிரபாகரன் |
| காட்டாறு குழு | செந்தில், |
| தாய்த் தமிழர் இயக்கம் | க.பா.சீனிவாசன், அருள் நாராயணன் |
| பெரியார் சிந்தனையாளர் இயக்கம் | ரகுராமன், |
| தமிழ்நாடு ஊடகவியலாளர் சங்கம் | இரா.சக்திவேல், சேதுபதி, |
| தமிழ்நாடு இயற்கை வளப்பாதுகாப்பு இயக்கம் | மா.மதிவாணன், பூவுலகு பி.சுந்தரராஜன் |

(சுப. வீரபாண்டியன்)

ஒருங்கிணைப்பாளர்

2



# பழைய தவறு கற்றுக்கொடுக்கும் பாடம்

நேர்காணல் - **தோழர் கொளத்தூர் மணி** தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்



**பாஜகவிற்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் பொருட்டு அண்மையில் டெல்லி சென்று இந்தியாவின் பல்வேறு முக்கியக் கட்சிகளின் தலைவர்களை மேற்கு வங்க முதல்வர் திரு.மம்தா பானர்ஜி அவர்கள் சந்தித்திருக்கிறார்கள். இது பற்றியத் தங்களுடையக் கருத்து.**

இது தேவையான ஒன்றுதான். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. 1967 ஆம் ஆண்டு ஒரு மாற்றம் ஏற்பட்டது. அப்போது பல மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தன. அப்போதிருந்துதான் மாநில சுயாட்சிக் கோரிக்கை வலுவானது. வீரேந்திர பாட்டீல் என்பவர் கர்நாடக முதலமைச்சராக இருந்தவர். அவர் தேர்தல் அறிக்கையிலேயே மாநிலங்களுக்கானக் கூடுதல் அதிகாரங்கள் பற்றி எந்த அளவிற்குச் சொன்னார் என்றால், மாநிலங்களுக்கு அதிகாரமே இல்லாத நிலை தொடர்ந்தால் டெல்லியில் இருக்கும் மாநிலங்களுக்கான இல்லங்கள் தூதரகங்களாக மாறும் நிலை ஏற்படும் என்கிற அளவிற்குச் சொன்னார். அவர் காங்கிரஸ் முதலமைச்சராக இருந்தவர். அப்போது தமிழ்நாடு, கேரளா, அசாம், உத்தரப் பிரதேசம் என பல மாநிலங்களில் மாநில சுயாட்சிக் குரல் எழுந்தது. அதற்குக் காரணம் அங்கெல்லாம் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தன. அதேபோன்று இப்போது மாநில உரிமைகளை வலுவாகப் பேசுகின்றக் கட்சிகள் மாநிலங்களில் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. இது ஒரு நல்ல வாய்ப்பான நேரமாக நாம் பார்க்கிறோம்.

**பல்வேறு கட்சிகள் இணைந்து ஒரு அணி உருவாகும் போது அந்த ஆட்சியோ அல்லது அந்தக் கூட்டணியோ சிறிது காலத்திலேயே முடிவுக்கு வந்துவிடுவதைப் பார்க்கிறோம். இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

பாடங்கள் மூலம், தவறுகள் இருந்தால் கற்றுக்கொள்ள வேண்டும். குறைந்த பட்சத்திட்டம் என்ற ஒன்று இதற்கு முன் வைத்துக் கொண்டதில்லை. இப்போது அதையெல்லாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பழைய தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு, புதிய முயற்சிகளை எடுக்க வேண்டும்.

**இந்திய அளவில் பாஜகவிற்கு எதிராகக் கட்சிகளை ஒருங்கிணைப்பதில் தமிழகத்தின் முன்னெடுப்பு பற்றி.**

ஒருமுறை சந்தித்திருக்கிறார்கள். 'ஒன்றியம்' என்று நாம் சொன்னதற்குப் பின் தற்போது பல்வேறு மாநிலங்களில் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அதேபோல் ஜிஎஸ்டி கவுன்சிலில் நாம் எழுப்பியக் கோரிக்கைகள் பல மாநிலங்களில் எதிரொலிக்கின்றன. முழுமையாக இல்லாவிட்டாலும் அது பற்றி ஓரளவிற்காவது சிந்திக்கும் போக்கு தற்போது வந்திருக்கிறது. ஆகையால் தமிழ்நாட்டில் நாம் நேரடி முயற்சி எடுக்கவில்லை என்றாலும் நம்முடைய முன்னெடுப்புகள் பலருக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றன.

**தமிழகத்தின் நலனுக்காகப் பிரதமரைச் சந்திக்கிறோம் என்று திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களும் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களும் சொல்வது பற்றி.**

தமிழக நலனுக்காகச் சந்திக்கிற அவர்கள் எப்போதோ சந்தித்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் கட்சிச் சிக்கலைத் தீர்ப்பதற்காகப் போனார்களோ அல்லது முருகனை மாநிலங்களவை உறுப்பினராக்க வேண்டும் என்று இவர்களை அழைத்துப் பேசியிருக்கலாம். ஏனென்றால் பாஜகவினர் வந்து கேட்கும் அளவிற்குக் கூட இவர்கள் இல்லை. உள்துறை அமைச்சர் இவர்களுக்கான நேரம் ஒதுக்காமல் ஒரு நாள் தங்கியிருந்து பார்க்கும் அளவிற்குத்தான் இவர்களுடைய மரியாதை இருக்கிறது. தாங்கள் ஆட்சியாளர்களாக இருந்த போது தமிழ்நாட்டு நலனுக்காகப் போகாதவர்கள் இப்போது அதற்காக போகிறோம் என்று சொல்வது சுத்தப் பொய் என்று எல்லோருக்கும் தெரியும். அதிமுக உறுப்பினர்கள் கூட அப்படி நம்ப மாட்டார்கள். அல்லது இப்போது ரெய்ட் எல்லாம் நடப்பதால் பாதுகாப்புக் கருதிக் கூடப் போயிருக்கலாம்.

**நீண்ட நெடும் பொதுவாழ்க்கையில், சமூகநீதிப் போராளியாக, பல்வேறு ஆட்சிகளைச் சந்தித்திருக்கும் தங்கள் அனுபவத்திலிருந்து இன்றையப் புதிய ஆட்சியை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் இந்தியாவிற்கே முன்மாதிரியாகத் தமிழக அரசு செயல்பட்டது. முதலமைச்சர் தொடங்கி அமைச்சர்கள் அதிகாரிகள் என அனைவரும் கொரோனாவைக் கட்டுப்படுத்தப் போராடியது, அனைத்துத் தரப்பினரும் பாராட்டக் கூடிய ஒன்றாகும்.


சமூகநீதியைத் தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர். பாஜகவினர் கூட இடஒதுக்கீடு பற்றியக் கேள்வி வந்த போது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ்நாட்டில் மட்டும் அதை ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். இவையெல்லாம் வாயளவில் சமாளிப்பதற்காகப் பேசப்படுகிறது. உளப்பூர்வமாக அதைக் கொள்கையாகக் கொண்டிருக்கக்கூடியக் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம். ஏனென்றால் எதிர்க்கட்சியாக இருந்த காலகட்டத்தில் கூட ஒன்றிய அரசின் மருத்துவ இடஒதுக்கீட்டுக்காக வழக்கு நடத்தித் தொடர்ந்து போராடியது திமுகதான். எனவே சமூக நீதிப் பணிகளில் அவர்கள் முழு அக்கறையோடு இருப்பார்கள்.

'மதச்சார்பின்மை' என்பது நாம் இப்போது பாதுகாக்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு புதுத் திட்டம் தொடங்குவது என்பது அடிக்கல் நாட்டு விழா என்றுதான் சொல்லப்பட்டு வந்தது. இப்போது பத்திரிக்கைகள் தொடங்கி அனைத்து இடங்களிலும் பூமி பூஜை என்று சொல்லும் மாற்றம் வந்துவிட்டது. அரசு நிகழ்ச்சி அரசு நிகழ்ச்சியாகத்தான் நடக்க வேண்டும். இது போன்ற நிகழ்ச்சிகள் நிறைய நடப்பதை நாம் பார்க்கிறோம். 1967இல் திமுக ஆட்சிக்கு வந்தபோது ஆறு மாதம் எந்தவித விமர்சனமும் ஆட்சியின் மீது வைக்காதீர்கள் என்று காமராஜர் சொன்னார். அதனால் ஒரு காலகட்டம் ஆக வேண்டும். அரசின் நடவடிக்கைகளை எல்லாம் புரிந்து கொள்வதற்கு 10 நாள் 100 நாள்களில் எல்லாம் நாம் பேசிவிட முடியாது. ஏதாவது பேசவேண்டும் என்று பேசுவதற்காகத்தான் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன.

முதலமைச்சர் எல்லாக் கட்டத்திலும் சிறப்பாகச் செயல்படுவதைப் பார்க்கிறோம். தலைமைச் செயலாளர் தொடங்கி பல்வேறு அதிகாரிகளை நியமித்தது என மிகவும் ஆழமாக யோசித்து ஒவ்வொரு நடவடிக்கையையும் எடுத்து வருவதை நாம் பார்க்கிறோம். நல்ல முன்னெடுப்புகளாகத்தான் இருக்கின்றன. இவை தொடர வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். ஏனென்றால் கடந்த 10 ஆண்டுகளில் ஜனநாயக போராட்டங்களுக்குக் கூட இடமில்லாத ஆட்சியாகத்தான் இருந்தது.

நேர்கண்டவர்: மா.உதயகுமார்

## காணும் திசையெங்கும் கலைஞர் படம் திறப்போம்!



தமிழ்நாடு சட்டமன்றம் நூற்றாண்டு விழா காணும் இந்நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்களின் படம் சட்டமன்றத்தில் திறக்கப்படவுள்ள செய்தி மகிழச்சியைத் தருகிறது. இந்திய ஒன்றியத்தின் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் 02-08-2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் உருவப் படத்தை திறந்து வைக்க இருக்கிறார். அதே சமயம் 07-08-2021 அன்று கலைஞரின் நினைவுநாள் என்பதை மறக்க முடியாது. இந்த இரண்டு தேதிகளுக்கும் இடைப்பட்ட நாள்களில் தமிழர்கள் அனைவரின் இல்லங்களிலும், அலுவலகங்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் படத்தைத் திறந்து வைக்கவேண்டும். இது அய்யா பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் மண்.

## முதல்வருக்கு நன்றி!

தமிழ்நாடு பாடத்திட்ட நிறுவனத்தின் அறிவுரைக் குழு (Advisory Board) உறுப்பினர்களில் ஒருவராகப் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தமிழ்நாடு அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது மகிழ்ச்சியான செய்தி. இந்த நியமனத்தைச் செய்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மிக்க நன்றி!



*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## சாதி ஒழிப்புக் களத்தில் திமுக

சட்டமன்ற நூற்றாண்டு நிறைவு ஆண்டில், திராவிட இயக்கத்தின் அடிப்படையான சமூக நீதிப் போராட்டத்தில் முக்கியமான ஒரு வெற்றியைத் தி.மு.கழகம் இந்தியாவிற்கே பெற்றுத் தந்திருக்கிறது.

மருத்துவப் படிப்புக்கான அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் இதரப் பிற்படுத்தப்பட்டப் பிரிவினருக்கு 27% இடஒதுக்கீடு இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. மருத்துவ இளநிலைப் படிப்புகளில் 15% இடங்களும் முதுநிலைப் படிப்புகளில் 50% இடங்களிலும் அகில இந்திய தொகுப்புக்கு மாநில அரசுகள் அளித்து வருகின்றன. அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் பட்டியல் பிரிவினருக்கு மட்டுமே இடஒதுக்கீடு இருந்து வந்தது.

நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட வகுப்புவாரி இட ஒதுக்கீடு, 1951 இல் கொண்டுவரப்பட்ட முதல் சட்டத் திருத்தம் , மண்டல் குழு அமைக்கப்பட்டு சமூகநீதிக் காவலர் விபி சிங் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டப் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு என இந்தியச் சமூகநீதி வரலாற்றைத் திராவிட இயக்கம் தீர்மானிக்கும் சக்தியாக இருந்து வருகிறது.

ஆட்சிப் பொறுப்பில் இல்லாத போதும் திமுக சமூக நீதிக்காக எப்போதும் தொடர்ந்து போராடி வருகிறது. அப்படி இதரப் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டுக்காக உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்து போராடி வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பையும் அது பெற்றது. இந்த நிலையில் 2021-22 கல்வி ஆண்டில் இருந்து இதரப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி கிடைக்கப்போகிறது என்கிற இந்தச் செய்தி சமூகநீதியின் மாபெரும் வெற்றியாகும்.

தமிழக முதல்வரும் திமுக தலைவருமான தளபதி ஸ்டாலின் அவர்கள் கூறியிருப்பது போல விரைவில் இந்த 27 சதவீதம் என்பது தமிழ்நாட்டில் இருக்கும் 69 சதவீத இடஒதுக்கீட்டின் படி பிற்படுத்தப்பட்டோருக்கான 50 சதவீத இடஒதுக்கீடாக வழங்கப்படுவதற்கான தொடர் சமூகநீதிப் போராட்டத்தை நாம் மேற்கொள்வோம்.

இதரப் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு என்பது சாதி ஒழிப்பில் மிக முக்கியக் கருவியாகும். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு உறுதிப்படும்போதுதான் பட்டியல் பிரிவினருக்கான இடஒதுக்கீட்டில் அவர்களால் கை வைக்க முடியாது. இது பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் நலனையும் தாண்டி சாதியக் கட்டுமானத்தை அசைக்கக் கூடிய ஒன்றாகும்.

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்,
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

# அமைப்புச் செயலாளர் சுற்றுப்பயணம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்களுடன் கடந்த காலத்தில் 'நந்தன்' இதழில் இணைந்து பணியாற்றிய தோழர் ராஜசேகர் பெரம்பலூர் கூட்ட நிகழ்வின் போது பேரவையில் இணைந்தார்.

---

பெரம்பலூர் மாவட்டத்தில் 07-07-2021 அன்று அமைப்புச் செயலாளர் தோழர் புலேந்திரன் தலைமையில் நடைபெற்ற பேரவையின் மாவட்ட அமைப்புக் கூட்டத்தில் தோழர் ராஜேஸ்வரன் பெரம்பலூர் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். தோழர்கள் ராஜேஸ்வரன், வெற்றிச் செல்வன், ராமமூர்த்தி, அஜித்குமார், விக்னேஸ், பாரத், பிரபாகரன், முத்துமணி, பாலமுருகன் ஆகியோர் பேரவையில் இணைந்தனர். ஆகஸ்ட் மாதத்தில் பெரம்பலூரில் “நாங்கள் திராவிடக் கூட்டம்“ நூல் அறிமுகக் கருத்தரங்கம் நடத்துவதென அப்போது தீர்மானிக்கப்பட்டது.



---



07-07-2021, திருவாரூரில் நடைபெற்ற பேரவை நிகழ்வின்போது அமைப்புச் செயலாளர் தோழர் புலேந்திரன், அந்த மாவட்டச் செயலாளராக தோழர் புவனேசன், மாவட்டத் தலைவராக தோழர் ஜெய் கணேசு, நகர அமைப்பாளராக தோழர் ஆகாஸ்ராஜ், ஆகியோரை நியமித்தார். அந்தக் கூட்டத்தில் ஆகஸ்ட் மாதத்தில் “நாங்கள் திராவிடக் கூட்டம்“ நூல் அறிமுகக் கருத்தரங்கம் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

## தமிழறிஞரை இழந்தோம்!



தமிழப் பேரறிஞர், புலவர் இரா.இளங்குமரனார் அவர்கள் 25-07-2021 அன்று மறைந்து விட்டார். திருநெல்வேலி மாவட்டம் வாழவந்தாள்புரம் என்ற ஊரில் பிறந்த இவரின் இயற்பெயர் கிருட்டிணன். இவர் தான் பிறந்த ஊரிலேயே தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆய்வுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றார். பேராசிரியர் சி. இலக்குவானாரின் நண்பரான இவரின் தனித் தமிழ் ஈடுபாடும், மறைமலை அடிகளார், தேவநேயப் பாவணர் நூல் தொடர்பும் இவரைப் புலவர் இளங்குமரனார் ஆக்கியது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலித்திட்டத்தின் சிறப்புத் தொகுப்பாளராக இவரை இணைத்துக் கொண்டவர், திராவிட மொழிப் பேறிஞர் பாவாணர் அவர்கள். உடல் சற்று நலிவுற்று வயது மூப்பின் காரணமாக மதுரை திருநகரில் இளங்குமரனார் தன் 94ஆம் அகவையில் காலமானார். அவருக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக புகழஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian